புதுமலர்: 13 இதழ்: 01 தை - மாசி

# அனல்

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே

**அனலாயிருங்கள்**

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

*- ரோமர் 12:11 -*

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.01.2016

## பொருளடக்கம்


☑ அனலின் குரல்

☑ கவிதை - மகிழ்வோம் சிட்டுக்களாய்

☑ கதையும் கற்றதும் - தேவனுடைய பார்வையில் நீ விசேஷித்தவன்

☑ வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 04

☑ கர்த்தருடைய வேதம் குறைவற்றது

☑ பெண்கள் பக்கம் - இயேசு அவளை திரும்பி பார்த்து, மகளே!...

☑ அனலின் புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி

☑ நற்செய்திப்பகுதி - எனக்காக...

☑ பக்தர்களின் பயிலகம்

☑ குறுக்கெழுத்துப் போட்டி - 71

☑ போகும் இடமெல்லாம் தேவன்!

☑ அருட்பணியாளர் சரிதை - ஜான் ஜி பேட்டன், ஜான் ரோஜர்ஸ்

☑ வினா விடை - 73

☑ தேவன் தந்த வைரங்கள்





வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.






எழுத வேண்டிய முகவரி:

**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**






மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**ஆசிரியர் "அனல்",**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


**திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -**

Happy New Year

# 2016

## வாக்குத்தத்தம்

இஸ்ரவேலின் ராஜாவாகிய

**கர்த்தர்**

உன் நடுவிலே இருக்கிறார்:

**இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.**

செப்பனியா 3:15b

Happy New Year

# அனலின் குரல்





**ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

2016 ஆம் ஆண்டுக் குள் பிரவேசிக்கச் செய்த கர்த்தருக்குச் சகல மகிமை யையும் செலுத்துகின்றோம்.

காலம் தன் ஓட்டத்தை ஒழுங்காக ஓடிக்கொண்டே இருக்கின்றது. நாட்களாய், மாதங்களாய், வருடங்களாய் போய்க்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல ஒவ்வொரு மனிதனின் வாழும் காலமும் குறைந்து செல்கிறது. இதோ! 2016ஆம் ஆண்டுக்குள் வந்துவிட்டோம். இதை நினைக்கும் போதே காலத்தின் ஓட்ட வேகத்தை புரிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம். **தேவனாகிய இயேசு கிறிஸ்து மனிதனாய் இப் பூமிக்கு வந்து, மனிதனுடைய பாவம் போக்கும் பாவ நிவாரண பலியாகத் தன்னைக் கொடுத்தார். அவர் தன் ஊழியத்தையும் தான் செய்ய வேண்டிய வேலையையும், அதற்கான காலங்களையும் அறிந்தவராகவே தன்னை ஒப்புக் கொடுத்துச் செயலாற்றினார்.**

யோவான் சுவிசேஷம் 13ஆம் அதிகாரத்தில் **"தாம் தேவனிடத்தில் இருந்து வந்ததையும், தேவனிடத்துக்குப் போகிறதையும் இயேசு அறிந்து"** எனக் காண்கின்றோம். **சங்கீதக்காரன் "நாட்களை எண்ணும் அறிவைத்தாரும்"** என வேண்டுகிறார். நாம் ஏனோ தானோ என வாழ முடியாது. தேவன் கிருபையாய் ஒவ்வொரு மனிதனுக்கும் ஈந்த காலத்தை அறிந்து அவரின் சித்தத்தைச் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.






**இயேசு தாம் தேவனிடத்தில் இருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து போஜனத்தை விட்டெழுந்து, பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து சீஷருடைய கால்களைக் கழுவினார்.** மெய்யான ஊழியத்தின் மாதிரியை இயேசு காண்பித்தார். தேவனை அறிந்தவர்களே! விசுவாசிகளே! ஊழியர்களே! இது கடைசிக்காலம் என்பதை அறிந்து கொள்வோம், தாழ்மையைத் தரித்துக் கொள்வோம். நாங்கள் தூய்மையாய் இருப்போம், மற்றவர்களை தூய்மைக்கு நேராக நடத்துவோம். இயேசுகிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார் என்பதை அறிந்து கிறிஸ்துவின் ஏக்கத்தை நிறைவேற்றும் முன் மாதிரிகளாகத் திகழுவோம்.

**"கர்த்தரின் கிருபை உங்களோடு இருப்பதாக"**

- ஆசிரியர் -






# மகிழ்வோம்

## சிட்டுக்களாய்...




காரிருள் அகற்றிட
கதிரவன் எழும்பிட
துயரங்கள் நீங்கிய
புத்தாண்டு பிறந்ததே

புத்துயிர் பெற்றோம்
விரைந்து எழுந்தோம்
துன்பத்தின் நாட்கள்
வேகமாய் மறைந்ததே

புது இராகங்கள் பிறக்குதே
கிருபையை பாடிட
கீதங்கள் இசைப்போம்
படைத்தவர் மகிழ்ந்திட

இறகுகள் கோதினோம்
உயரமாய் எழும்பிட
உன்னத தேவனின்
தரிசனம் பெற்றிட

புது மாற்றங்கள் பலவும்
அலையென எழும்பிய
புது வருடத்தில் நாமும்
மகிழ்வோம் கர்த்தரில்!...





# தேவனுடைய பார்வையில் நீ விசேஷித்தவன்

வை.விமலதாஸ்

பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு பயங்கரமான பிரச்சினை இருந்தது. அவன் படிக்கின்ற பாடசாலையில் இருக்கின்ற நண்பர்கள் எப்போதும் அவனைக் கிண்டல் செய்து கொண்டேயிருப்பார்கள். இவன் மாத்திரம் எப்போதும் தனிமையாக இருப்பான். இவனுக்கு மிகவும் பயங்கரமான வருத்தமாகவும், துக்கமாகவும், ஏமாற்றமாகவும் இருக்கும். என்னை மாத்திரம் ஏன் எல்லோரும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறார்கள்? என்னை ஏன் எல்லோரும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்? என்னை யாருமே மதிக்கிறார்கள் இல்லையே? என்னை அவர்கள் தங்களுடன் சேர்த்துக் கொள்கின்றார்கள் இல்லையே? என்று மிகுந்த வேதனையோடு இருந்தான். எனவே ஒரு நாள் வீட்டில் தன் தகப்பனிடம் சொன்னான்: அப்பா பாடசாலையில் என்னை யாருமே தங்களுடன் சேர்த்துக் கொள்கின்றார்கள் இல்லையப்பா, என்னை யாரும் மதிக்கின்றார்கள் இல்லையப்பா எப்போதும் என்னை கிண்டல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று துக்கத்துடன் சொன்னான்.

உடனே அப்பா சொன்னார்: சரி....சரி....கவலைப்படாதே! நாளை காலையில் நான் உனக்கு ஒரு காரியத்தைக் கொடுக்கப்போகின்றேன். நீ அதுவரைக்கும் பொறுமையாக காத்திரு என்று சொன்னார். இவன் இரவெல்லாம் நித்திரை செய்யாமல் மிகுந்த எதிர்பார்ப்போடு அப்பா அப்படி என்ன தான் கொடுக்கப்போகின்றார் என்று காத்திருந்தான். அடுத்த நாள் காலை விடிந்தவுடன் அவன் அப்பாவிடம் சென்று: அப்பா! எனக்கு அப்படி என்னதான் கொடுக்கப்போகின்றீர்கள்! என்னுடைய பிரச்சினைக்கு என்ன செய்யப் போகின்றீர்கள்? என்று கேட்டான். உடனே அவனிடம் ஒரு அழகான கல்லைக் கொடுத்தார். இந்தக் கல்லை இன்று நீ சந்தைக்கு எடுத்துச் சென்று



அங்கே நீ யாரையெல்லாம் காண்கின்றாயோ அவர்களிடம் இந்த கல்லை காண்பித்து இதன் பெறுமதி என்ன என்பதனை தெரிந்து கொள். ஆனால் யாரும் இதனை எனக்கு விற்பனை செய்துவிடு என்று கேட்டாலும் விற்பனை செய்யக்கூடாது. மாறாக இதன் பெறுமதி என்ன என்பதனை மாத்திரம் அறிந்து கொண்டு வரவேண்டும் என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார். அவனும் மிகுந்த ஆவலுடன் என்ன தான் நடைபெறப்போகின்றது என்று அந்தக் கல்லை எடுத்துக் கொண்டு சந்தைக்குச் சென்றான்.

அந்த நாள் முழுவதும் அந்தக் கல்லைக் கொண்டு சந்தை முழுவதையும் சுற்றி வந்தான். அவ்வாறு சந்தைக்குள் முதலாவதாக மரக்கறிகளை விற்பனை செய்பவரிடத்தில் சென்றான். அவரிடத்தில் இந்தக் கல்லைக் காண்பித்து: ஐயா, இந்தக் கல்லைப் பார்த்து இது எவ்வளவு பெறுமதியானது என்பதனை கணித்துச் சொல்லுங்கள் என்று கேட்டான். உடனே அந்த மரக்கறி வியாபாரி அந்த கல்லைப் பார்த்துவிட்டு, மிகவும் நன்றாகத் தான் இருக்கின்றது! பளபளத்துக் கொண்டிருக்கிறது. தம்பி இந்தக் கல்லை எனக்குத் தந்துவிடு, நான் ஒரு பை நிறைய மரக்கறிகளை உனக்குக் கொடுத்துவிடுகின்றேன் என்றார். அதற்கு இவன்: இல்லை ஐயா! மன்னித்துவிடுங்கள், நான் இதனை விற்கவில்லை, இதன் பெறுமதியை மாத்திரம் தெரிந்து கொள்ள வந்தேன் என்று சொல்லி அந்தக் கல்லை வாங்கிக் கொண்டு அடுத்த இடத்திற்கு சென்றான். அங்கே மீன்களை விற்பனை செய்து கொண்டிருக்கும் ஒருவரிடம் சென்று மரக்கறி வியாபாரியிடம் கேட்டவாறே அந்தக் கல்லைக் காண்பித்துக் கேட்டான். அந்த மீன் வியாபாரியும் அந்தக் கல்லை நன்றாகப் பார்த்துவிட்டு, இந்தக் கல் மினுமினுப்பாகத் தான் இருக்கிறது! தம்பி இந்தக் கல்லுக்கு பதிலாக நான் 10Kg மீன்களைத் தருகின்றேன், இதனை எனக்கு கொடுத்துவிடு என்று கேட்டார். இல்லை ஐயா இந்தக் கல்லை நான் விற்கமுடியாது, மன்னித்து விடுங்கள் என்று சொல்லி அந்தக் கல்லை வாங்கிக் கொண்டு இன்னொரு இடத்திற்கு சென்றான்.

அங்கே காணப்பட்ட ஒரு நகைக்கடைக்குள் இந்தக் கல்லுடன் சென்றான். அங்கே இருந்த வியாபாரியிடம் இந்தக் கல்லைக் காண்பித்து ஐயா இந்தக் கல்லை எவ்வளவு பெறுமதிக்கு கொடுக்கலாம் என்று கேட்டான். அந்த நகை வியாபாரியும் அந்தக் கல்லை நன்றாகப் பார்த்துவிட்டு, இந்தக் கல்லுக்கு நான் 50இலட்சம் கொடுக்கின்றேன் எனக்கு இந்தக் கல்லைத் தருவாயா? என்று கேட்டார். இவனுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. இந்தக் கல்லுக்கு 50இலட்சமா...? என்று வியந்து போனான். ஆனாலும் இல்லை இல்லை நான் இந்தக் கல்லை விற்பனை செய்யமுடியாது, இதன் விலை என்ன என்று அறிந்து கொள்ளத்தான் வந்தேன் என்றான். அதற்கு அந்த நகை வியாபாரி இல்லை அப்படியானால் இந்தக் கல்லுக்கு நான் 2கோடி பணம் கொடுக்கின்றேன், இதனை எனக்கே தந்துவிடு என்று கேட்டார். இப்போது இவனுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது. அப்பாடா! இவ்வளவு பெறுமதியானதா இந்தக் கல், இதனை இவருக்கே விற்றுவிடலாமா என்றும் சிந்தித்தான். ஆனாலும் அவனுடைய அப்பா கூறியது அவனுக்கு நினைவுக்கு வந்தது. எனவே இல்லை இல்லை என்று சொல்லிவிட்டு அந்தக் கல்லை வாங்கிக் கொண்டு அடுத்த கடையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அங்கே இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்யும் ஒரு கடை இருந்தது. உடனடியாக கதவைத் திறந்து கொண்டு அந்தக் கடைக்குள் சென்றான். அங்கே இருந்த மனிதனிடம் ஐயா என்னிடம் இருக்கும் இந்தக் கல் எவ்வளவு பெறுமதியானது என்று கணித்துச் சொல்லுங்கள் என்று கேட்டான். அவர் அந்தக் கல்லை வாங்கி நன்றாக பரிசோதனை செய்து பார்த்துவிட்டு அவனை மிகவும் ஆச்சரியத்துடன் நோட்டமிட்டார். அவனைப் பார்த்துக் கேட்டார், தம்பி இந்தக் கல் உனக்கு எப்படி கிடைத்தது. இது எவ்வளவு விலை உயர்ந்த கல் தெரியுமா? இந்தக் கல்லுக்கு நான் விலை சொல்ல முடியாது. ஏனென்றால் இது விலை மதிக்க முடியாத பெறுமதியான கல். என்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் நான் விற்றால் கூட இந்தக் கல்லின் பெறுமதி வராது. அவ்வளவு பெறுமதியானது இந்தக் கல் என்று சொன்னார்.

உடனே அந்தச் சிறுவன் அந்தக் கல்லை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு ஓடிவந்தான். அன்றைக்கு சந்தையில் தான் சென்ற கடைகளையும், அந்த கடைகளில் இருந்தவர்கள் இந்தக் கல்லுக்கு மதித்த பெறுமதிகளையும் கூறினான். உடனே அந்த தகப்பன் சொன்னார்: தம்பி! இந்தக் கல் மிகவும் விலை மதிக்கமுடியாத பெறுமதியான கல். ஆனால் நீ முதலாவதாக சென்ற மரக்கறி விற்பவர் தன்னுடைய தகுதிக்கு ஏற்றதாக, தனக்கு எவ்வளவு தெரியுமோ அந்த விதத்தில் அந்தக் கல்லுக்கு ஒரு விலையை நிர்ணயித்தார். அதுபோல மீன் விற்பவரும், நகை விற்பனை செய்பவரும் அதற்கு விலையை நிர்ணயித்தார்கள். ஆனால் இறுதியில் உண்மையாக இந்தக் கல்லைப் பற்றி தெரிந்தவராகிய இரத்தினக் கல் விற்பனை செய்பவரிடம் சென்ற போது தான் அவர் அதற்குரிய சரியான விலையை நிர்ணயித்துச் சொன்னார். இன்றைக்கு உன்னை எல்லோரும் கிண்டல் செய்கின்றார்கள் என்று நீ துக்கப்படுகின்றாய், யாரும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை, யாரும் என்னை சேர்த்துக் கொள்ளவில்லை, நான் திறமையற்றவனாக இருக்கின்றேனே என்றெல்லாம் நீ சிந்திக்கின்றாய். ஆனால் ஆண்டவர் உன்னை மிகவும் விலைமதிப்பற்றவனாகத் தான் பார்க்கின்றார். அவருடைய பார்வையில் நீ விலையேறப்பெற்றவன். என்று சொன்னார். அப்போது தான் அந்த சிறுவன் தன்னுடைய தாழ்வு மனப்பாண்மையில் இருந்து வெளியே வந்தான்.

ஆம் நண்பர்களே! மலர்ந்திருக்கும் இப் புதிய ஆண்டிலே உங்கள் வாழ்க்கை சிந்தித்துப்பாருங்கள். கடந்த வருடத்தில் யாரும் உங்களை கவனிக்காமல் இருந்திருக்கலாம், யாரும் உங்களை கணக்கிலெடுக்காமல் இருந்திருக்கலாம். அதனால் உங்களை நீங்களே சிறுமைப்படுத்தியவர்களாய், தாழ்வு மனப்பாண்மையோடு இந்த புதிய ஆண்டிற்குள் கடந்து வந்திருக்கலாம். ஆனால் ஒன்றை மறந்து போகாதீர்கள்! நீங்கள் ஆண்டவருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்கள்! உங்களின் பெறுமதி அவருக்குத் தான் தெரியும். அவர் அவனவனுக்கு ஏற்ற காரியங்களைத் தான் கொடுத்திருக்கிறார். உங்களிடம் இருக்கும் திறமைகளும், குணநலன்களும் இன்னொருவரிடத்தில் இருக்காது. அது உங்களுக்கென்று பிரத்தியேகமாக இருக்கின்ற ஒன்று! எனவே உங்களை நீங்களே தாழ்வு மனப்பாண்மைக்குள் இட்டுச் செல்லாமல் கர்த்தருக்குள் இன்னும் அதிகமாய் முன்னேறிச் செல்வோமா. **ஏசாயா 43:4 நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்:**



# எழுப்புதலுக்கான இதயக்கதறல்

பாகம் 04

*Heart Cry for Revival*




## வாலிபர் வளாகம்

போதகர் வேதநாயகம் சுமணன்

**என் அருமை சகோதரர்களுக்கு! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாவதாக.**

கடந்த காலங்களில் நாம் இவ்வளாகத்தினூடாக தியானித்து வரும் பகுதி **"எழுப்புதலுக்கான இதயக் கதறலாகும்".** வந்திருக்கும் இவ் ஆண்டில் (2016) உன்னுடைய தீர்மானங்கள் என்னவாக இருக்கின்றது? அவற்றைப்பட்டியலிட்டுக்கொள்.

சத்திய வேதத்திலிருந்து தேவனுடைய மகத்தான தீர்மானங்களை காண்பிக்க விரும்புகின்றேன். நீயும் உன் வாழ்வில் இவற்றை ஆராய்ந்துபார். எழுப்புதலை ஏங்கும் மனிதர்களின் வாழ்வில் உண்டான மாற்றங்கள் மகத்தானவை. அவற்றை தேவனே அவர்களின் இருதயங்களில் அக்கினியாய் போடுகிறார்.

## எஸ்தர்

**"கர்த்தர் என்னை என்ன நோக்கத்துடன் வைத்திருக்கிறார்"** என்பதைக் கருத்திற் கொண்டு நமது சூழ்நிலையைக் கவனித்து கர்த்தருக்கென்று செயல்படும்படி எஸ்தரின் வாழ்க்கை எம்மை ஏவுகின்றது.

**நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால் யூதருக்கு சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்... நீ இப்படிப்பட்ட காலத்திற்கு**

**உதவியாயிருக்கும்படிக்கு உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்.**

✷ சிறந்த அழகி மட்டுமன்றி அடக்கமும் பணிவுமுடையவள். தேவ கிருபையினாலும் நற்பண்புகளினாலும் அரசரின் அன்பைப் பெற்றாள்.

✷ தனது வளர்ப்புத் தந்தைக்கு கீழ்ப்படிந்து வளர்ந்தாள் (தாய் தகப்பன் இல்லாத ஓர் அனாதை இவள்). அவரின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டாள்.

✷ கர்த்தருடைய ஜனங்களுக்காக தனது உயிரை துச்சமென மதித்து அரசனை சந்திக்கச் சென்றவள்.

யாராவது அழைக்கப்படாமல், உள் முற்றத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால் புருஷரானாலும், ஸ்திரீயானாலும் சரி அவர்கள் பிழைக்கும படிக்கு அவர்களுக்கு ராஜா பொற் செங்கோலை நீட்டினாலொளிய மற்றப்படி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு இது சகலருக்கும் தெரியும். நான் இந்த முப்பது நாளளவும் வரவழைக் கப்படவில்லை என்று வளர்ப்புத் தகப்பனுக்குச் சொல்லச் சொன்னாள்.

ஆனாலும் அவளால் அமைதியாக இருக்கமுடியவில்லை, கிறிஸ்து யூத இனத்திலே தான் வெளிப்படுவார், அவருடைய வெளிப்படுதலை தடுக்க சத்துருவானவன் அந்த இனத்தையே கரு அழித்துவிட முயற்சித் தான் ஆமான் என்னும் பெரிய பதவி வகித்தவன் மூலமாக. ஆனாலும் கிறிஸ்து வெளிப்பட்டே ஆகவேண்டும், சாத்தானுடைய தலையை நசுக்குவார் என்பது தீர்க்கதரிசனம். தன்னுடைய இனம் அழிவதைக் கொஞ்சம்கூட பொறுக்க முடியாதவளாக, நீங்கள் உபவாசித்து ஜெபித்துக கொள்ளுங்கள்: நானும் உபவாசிக்கிறேன். பின், ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன், நான் செத்தாலும் சாகிறேன் என்றாள்.

---

ஒரு மனிதன் தேவனுக்கு கீழ்ப்படிந்து செயலில் இறங்கியது இயேசு பிதாவின் சித்தத்திற்கு சம்பூரணமாய் கீழ்ப்படிந்தது போல எஸ்தரும் கீழ்ப்படிந்து தேவ திட்டத்திற்காய் அர்ப்பணித்ததைப் பாருங்கள். இயேசு பிதாவிடம் பரிந்து பேசுவது போன்று எஸ்தரும் தன் ஜனங்களுக்காய் ராஜாவினிடத்தில் பரிந்து பேசுகிறாள்.

---

அகாஸ்வேரு ராஜாவின் அரண்மனையிலிருந்து இரண்டு செய்திகள் அனைத்து தேசத்திற்கும் சென்றன.

**ஒன்று: யூத ஜனங்கள் எல்லாம் ஒரே நாளில் அழிகப்பட வேண்டும்.**

**இரண்டு: யூத ஜனங்கள் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும்.**

துக்கங்களை சந்தோஷமாய் மாற்றுகின்ற தேவன் தன் ஜனத்தின் பெருமூச்சை, கண்ணீரைக் கண்டு ராணியாகிய எஸ்தரின் மூலம் அழிவுக்குத் தப்புவித்தது போல இன்றும் கூட இந்த தேசத்தை,



திருச்சபையை, குடும்பங்களை, ஏன் நீ பணி செய்யும் இடங்களை கெடுத்து அழித்துக் கொண்டிருக்கும் சத்துருவின் சாம்ராஜ்யத்திற்கு முடிவுகட்ட உன்னை நம்பி இருக்கின்றார்.

---

*தம்பி, தங்கையரே ஒரு பரிசுத்த வைராக்கியம் உன்னை பற்றிக் கொள்வதாக. இந்த ஆண்டில் கிறிஸ்துவை பிரசங்கிப்பதில் (மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதில்) ஆர்வம் கொள்வாயாக. ஒரு பெண் தான் யார் என்பதையும், என்ன நோக்கத்திற்காக வைக்கப் பட்டேன் என்பதையும் சரியாக புரிந்து கொண்ட போது நடந்த காரியத்தை பார்த்தாயா? இன்றும் கூட நீ ஏன் எழும்பக்கூடாது? திகையாதே! பயப்படாதே! உனக்குள் இருப்பவர் பெரியவர்!. பரிசுத்தத்திற்கும், தேவ நீதிக்கும் நீ வைராக்கியம் பாராட்டுவாயேயானால் நீயே தேவனால் பயன்படுத்தப்படும் பாத்திரமாவாய். ஒரு சந்தேகமும் இல்லை.*

---

## பேதுரு

அதிகம் பெலவீனமானவன், அடிக்கடி விலகிவிடுகிறவன், நிலையில்லாதவன், உறுதியற்றவனாய் அலசடிப்பட்டுக் கொண்டிருந்த பேதுருவின் வாழ்வின் மீது தேவனுடைய நோக்கம், திட்டம் மாறவில்லை. அவனை தேடிச் செல்கின்றார். பலமுறை உயிர்ப்பித்து உயர்த்தி, மகிழும்படியாக, எனக்குப் பின்னாகப் போ சாத்தானே எனக் கூறிய போதும் இயேசுவை விட்டுப்போகாதவன். அவரையே அண்டி இருந்தவன். ஆவியானவரின் அருள்மாரி மழையை யூதருக்கும், சமாரியத்துக்கும் புறஜாதிகளுக்கும் திறந்து விட்டவர் இந்தப் பேதுரு தான். அவன் தன்னை கிறிஸ்துவுக்குள் உறுதிப்படுத்திக் கொண்டான். கிறிஸ்துவும் அவனை பெலப்படுத்திவிட்டார்.

- இயேசு இவனிடம் முதலாவது கூறியது: "என் பின்னே வாருங்கள்". இறுதியாக கூறியது: "நீ என்னைப் பின்பற்றிவா" பேதுரு இதற்கு முற்றிலும் கீழ்ப்படிந்தார்.
- இயேசுவை குறித்த சரியான வெளிப்பாடு பெற்றுபகிரங்கமாக அறிக்கையிட்ட முதல் சீஷன்.
- இயேசுவுக்காக மல்குஸ் என்பவனின் காதை வாளால் வெட்டிய போதும் இயேசுவின் சொல்லிற்கு கீழ்ப்படிந்து வாளை உறையிலே போட்டார்.
- பாடுகளில் தொடர்ந்தும் ஊழியம் செய்தார்.
- பின்னர் சிறிது மாயம் பண்ணிய போது பவுலால் கடிந்து கொள்ளப்பட்டார் (கலாத்தியர் 2:11-17). தவறை திருத்தி தொடர்ந்து சரியாய் ஊழியம் செய்தார்.
- இறுதியாக கிறிஸ்துவுக்காக (அவரை மறுதலியாமல்) சிலுவையில் தலை கீழாக அறைந்து கொலை செய்யப்பட்டார்.

பெலவீனங்களும், தோல்விகளும் நிறைந்த இவனை (ஒரு முறை இயேசுவைக் கூட தெரியாது என சபிக்கவும், சத்தியம் பண்ணவும் செய்தவன்) ஆண்டவர் தனது பணியை செய்யும் பொறுப்பை கொடுத்து இவனை ஆதி சபையின் தூணாக விளங்கப்பண்ணினார்.

தன்னிலே தான் நிறைவற்றவனாக தன்னையே விளங்கிக் கொள்ள முடியாதவனாக இருந்த அவனை கிறிஸ்து பிரகாசிக்கச் செய்தார். அழைத்தவர் உண்மையுள்ளவர், முடிவு பரியந்தம் நடத்துவர்.

---

**வாழ்க்கையில் உன் தீர்மானங்களை அடிக்கடி மாற்றிக் கொண்டு வாழ்வின் பெறுமதியை உணராமல் வாழ்கின்றாயோ? இதோ பேதுருவின் வாழ்விலுண்டான மாற்றங்களைப் பார். நான் பாவியான மனுஷன் என்று தன்னைத் தாழ்த்துகின்றான். தனது உண்மை நிலையை உணர்ந்து அறிக்கை செய்யும் எந்த மகனையும், மகளையும் தேவன் தனது பெரிய திட்டத்தில் பயன்படுத்துவது திண்ணம்.**

---

எஸ்தரைக் குறித்த தேவ திட்டத்திற்கு எஸ்தர் தன்னை சம்பூரணமாய் (ஜீவனானாலும், மரணமானாலும்) கையளித்தவள்.

பேதுருவைக் குறித்த தேவ திட்டத்திற்கு பேதுரு தன்னை முற்றுமுழுதாக கொர்நேலியுவின் வீட்டில் பிரசங்கிக்கப்பட்ட போது தான் சிறப்பான ஊழியத்தின் விசாலமான மனநிலையோடு பணிசெய்ய தன்னை பிரித்து வைத்து இறுதி மூச்சுமட்டும் சோராது தேவ ராஜ்யப்பணியில் ஓடினான். 3000, 5000 ஆக ஆத்தும அறுவடைப் பணியின் திறவுகோல் பிரசங்கியாக தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட பாத்திரம்.

யாருக்குத் தெரியும், ஒரு வேளை இதை வாசித்துக் கொண்டிருக்கும் மகனே, மகளே நீ தான் தேவன் பயன்படுத்தும் (உலகளாவிய சுவிசேஷப் பணிக்கு) கனத்துக்குரிய பாத்திரம் ஒன்று. சற்று நின்று நிதானி, சற்று ஆழ்ந்து சிந்தனை செய். முற்று முடிய ஒப்புக்கொடு அவர் கரத்தில்.

**ஜெபிக்கலாமா,**




அன்பின் பிதாவே, இப் புதிய ஆண்டில்
என் வாழ்விலும் நீர் வைத்திருக்கும்
திட்டத்திற்கும், இருளில் வாழும்
மாந்தர்களை மீட்கும் சுவிசேஷப்
பணியிலும் கூடுபட்டு தேவ ராஜ்யத்தை
விஸ்தாரிக்க கிருபை தாரும் தேவனே
இயேசுவின் நாமத்தில் பிதாவே!.

ஆமென்.








ரேமா


அருமையான நண்பனே! இப் புதிய ஆண்டில் உன் வாழ்விலும் தேவன் குறைவை நீக்கி நிறைவாக்கி நன்மையினால் உன்னை நிரப்பி நடத்துவாராக!

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. — சங்கீதம் 19:7 -**

தேவனுடைய வார்த்தையில் எவ்வளவேனும் குறைவு இல்லை. அது முற்றிலும் நிறைவானதும், உண்மை யுள்ளதும் மாறாததுமாக இருக்கின்றது.

சத்திய வார்த்தையால் மனிதன் எச்சரிக்கப்படுகின்றான். **அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. — சங்கீதம் 19:11 -**

இந்த ஆண்டிலும் உன் தனிப்பட்ட குடும்ப வாழ்வில் தேவன் வைத்திருக்கும் மிகுந்த பலனைப் பெற்றுக் கொள்வதற்கு நீ ஒன்று செய், அழியாத தும், மாசற்றதும், வாடாததுமான ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொள், என்ன வந்தாலும் அவருடைய வார்த்தையை கைக்கொள்வதில் சோர்ந்து போகாதே. மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.








# இயேசு திரும்பி அவளைப் பார்த்து: மகளே!...

திருமதி. J. பிலிப்




**அன்பின் சகோதரிகளே! புத்தாண்டு வாழ்த்துக்கள்!**


தேவ கிருபையினாலே ஒரு புதிய ஆண்டினை நாம் காணும்படி கர்த்தர் எமக்கு கிருபை அளித்திருக்கின்றார். இவ் ஆண்டு தேவ கிருபை, தேவ தயவு, தேவ ஒத்தாசை எங்கள் அனைவருடன் இருக்கும்படியாக தேவனை நாம் விசுவாசித்து நடப்போமாக.

அன்பான சகோதரிகளே, **மத்தேயு 9:22a இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே,** என்பதாக பார்க்கின்றோம்.

**என்ன ஆச்சரியம்? இயேசுவையே திரும்பித் தன்னைப் பார்க்க வைத்த சகோதரியின வாழ்வைக் குறித்து நாம் 2016ஆம் வருட ஆரம்பத்தில் தியானிப்பது நல்லது அல்லவா?**

இயேசுவை கண்ட யவீரு தன்னுடைய குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள்: அவள் மேல் இயேசு கை வைத்தால் அவள் பிழைப்பாள என்று இயேசுவை வேண்டிக் கொண்டதின் நிமித்தம் இயேசு தம்முடைய சீஷரோடு யவீருவின் பின்னே சென்றார். திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள் **(மாற்கு 5:22-24).**

திரள் கூட்டம் இயேசுவுக்கு பின் சென்று கொண்டிருக்கும்போதுதான் பன்னிரண்டு வருடங்களாக பெரும்பாடுள்ள நோயினால் பீடிக்கப்பட்டு சரீரம் குணமடையாத நிலையில் தனக்கு உண்டானவையெல்லாம் செலவழித்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போதுதான் இயேசுவைக் குறித்து இவ்ஸ்திரீ கேள்விப் பட்டு கூட்டத்துடன் தானும் ஒருவராக சென்று கொண்டிருக்கின்றாள். இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்திலே எண்ணியவுடன், "வஸ்திர ஓரத்தைத் தொட்டாள்". தொட்டவுடன் அவளுடைய பெரும்பாடு நின்று போயிற்று.



**உடனே இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே! என்றார்.**

"2016ஆம் ஆண்டில் கால்எடுத்து வைத்திருக்கும் சகோதரியே! இவ் ஆண்டு இயேசு உன்னையும் திரும்பிப் பார்க்க ஆயத்தமாய் இருக்கிறார். நீ ஆயத்தமா? அல்லாவிடின் நீ இன்றே ஆயத்தமாகு!".

இயேசு அழைப்பு பெற்று யவீருவின் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கிறார். ஆனால் பெரும்பாடுள்ள ஸ்திரியின் செயல் இயேசுவை திரும்பி அவளைப் பார்க்க வைத்தது. பார்த்த இயேசு அவளுடைய பெற்றோர் அவளுக்கு வைத்த பெயரைக் கூறி அழைக்கவில்லை. அல்லது பெரும் பாடுள்ள ஸ்திரீயே என்றும் அழைக்கவில்லை. மாறாக, **மகளே!** என்று தகப்பன் தன் சொந்தப் பிள்ளையை அழைப்பது போன்று அன்பாக இயேசு அழைக் கின்றார். அவளுடைய இந்தச் செயல் இயேசுவின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது.


இயேசு உன்னையும் இவ் ஆண்டு மகளே! என்று அழைத்து உன்னையும் ஏற்றுக் கொள்ள இரு கரம் நீட்டி அன்பாகப் பார்க்கிறார். நீ அவருடைய மகளாக இருக்கவிரும்புகின்றாயா? அதற்கு நீ ஆயத்தமா? அப்படி இல்லையென்றால் இன்றே ஆயத்தப்படு!.

இயேசுவே திரும்பி அவளைப் பார்க்கச் செய்த செயல்தான் என்ன? வியாதிப்பட்டு, வேதனையுடன் ஒன்றும் இல்லாத வேளையில் தான் இயேசுவைக் குறித்து கேள்விப்படுகின்றாள். கேள்விப்பட்டவுடன், உள்ளத்தில் ஓர் தீர்மானம்: **இயேசுவுக்குப் பின் செல்வேன்! சொஸ்த மாவேன்!** என்ற விசுவாசத்துடன் இயேசுவுக்குப் பின் வந்தாள். ஆனால் அவளுக்கு முன்பதாகவே திரள் ஜனக்கூட்டம் இயேசுவுக்கு பின்பாக நிற்கி றது. இதைப் பார்த்த அந்த ஸ்திரீ பயப்பட்டாளா? இல்லை! திரள் கூட்டத்தின் மத்தியில் அதிலும் தான் ஒரு பெண், சாதாரண பெண் அல்ல: வியாதி யின் அகோரம் நிறைந்தவள். ஜனங்கள் என்னை விடமாட்டார்கள். என்னை தள்ளிவிட்டால் நான் கீழே விழுந்து விடு வேன், என் வியாதி இன்னும் அதிகரித்து விடும் என அவள் அவி சுவாசப்படவில்லை. இயேசு வுக்குப் பின்பதாகத் தான் செல்வேன் என்று எடுத்த தீர்மானத்துடன் சென்று கொண்டிருக் கின்றாள். அவள் எவ்வ ளவு தூரம் அவரைப் பின்பற்றினாளோ தெரிய வில்லை. ஆனால விடா முயற்சியுடன் இயேசு வுக்குப் பின்பாக ஜனக் கூட்டத்தின் மத்தியில் இவளும் சென்று கொண்டி ருக்கின்றாள்.

இயேசுவுக்கு முன்பாக ஓடி தன்னை காண்பிக்கவில்லை, பின் னாகவே சென்று விசு வாசத்துடன் இயேசு வின் வஸ்திரத்தை தொட்டாள், **"உடனே பெரும்பாடு நின்று போயிற்று".**

இயேசு யவீரு வின் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தவர். அதி லும் திரள் கூட்டம் அவரை பின் தொடர்கி றது. ஆனாலும் "இயேசு வின் கண்களில் இவ் ஸ்திரீக்கு மட்டும் கிருபை கிடைத்தது".

இதை வாசிக் கும் சகோதரியே! உனக்



கும் ஒரு நல்ல செய்தி, என்னையும் இயேசு திரும்பிப் பார்ப்பாரா, என்று நீ சிந்திக்கின்றாயா? பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவைப் பற்றி கேள்விப பட்டவுடனே விசுவாசத்துடன் பின்னால் சென்றாள். "நீயும் எத்தனை வருடங்களாக இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டும், அறிந்தும் அவரைப் பின்பற்ற வேண்டியவிதமாக பின்பற்றுகின்றாயா? இயேசுவுக்கு பின்னால் செல்கின்றாயா?" அல்லது இயேசுவுக்கு முன் செல்ல முயற்சிக்கின்றாயா? இயேசு அவளைத் திரும்பி பார்க்கும் மட்டும் பொறுமை யுடன் அவருக்குப் பின்பதாக அமைதியாக சென்றாள். அதுமட்டுமல்ல, "என்னைத் தொட்டது யார்?" என்று கேட்டவுடன், அவள் மறைந்திருக்க வில்லை. சுகம் பெற்றுவிட்டேன், யாரும் என்னைக் கண்டு கொள்ளமாட்டார்கள் என்று அவள் மறைந் திருக்கவில்லை. இயேசுவுக்கு முன்பதாக வந்து விழுந்து தான் அவரைத் தொட்ட காரணத்தையும், உடனே தான் சொஸ்தமானதையும் எல்ல ஜனங் களுக்கும் முன்பதாக அறிவித்தாள்.

ஸ்திரீ எதையும் இயேசுவுக்கு மறைக்க வில்லை. உண்மையையெல்லாம் அறிவித்தாள். மனிதர்களுக்கு காரியங்களை மறைக்கலாம். ஆனால் இயேசுவுக்கு எதையுமே மறைக்க முடியாது. கடந்த ஆண்டு உன்னுடைய உண்மைத்து வம் எப்படி என்பதை சிந்தித்தாயா? அது மட்டு மல்ல தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங் களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள். **லூக்கா 8:47 அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லையென்று கண்டு, நடுங்கிவந்து, அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் சொஸ்த மானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள்.** கடந்த காலங்களில் தேவன் உனக்கு செய்ததை ஜனங்களுக்கு முன்பாக அறிவித்தாயா?

இப் பூமியில் நீ ஒரு பூட்டி என்ற ஸ்தானம் அல்லது ஆச்சி, அம்மம்மா, அப்பம்மா, அம்மா, வாலிப பெண், அல்லது எப்படியான ஸ்தானமாக வும் இருக்கலாம். ஆனால் நீயும் இயேசுவின் மகளாக இருக்கவிரும்பினால் இவ் வருடம் நீ எடுக்க வேண்டிய தீர்மானம்: "உன் தேவ னுக்கு உண்மையுள்ள மகளாக இருக்க வேண் டும்". உண்மையாகவே நீ தீர்மானம் எடுத்து செயற்பட்டால் பெரும் பாடுள்ள ஸ்திரியை திரும்பி பார்த்த தேவன் உன்னையும் பார்த்துச் சொல்வார்: **"மகளே திடன் கொள்! உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதா னத்தோடே போ!"** என் பார். அப்போது: தேவ சமாதானத்தை நீ பெறு வாய். உன் வாழ்க்கை மூலம் மற்றவர்களும் இயேசுவை அறிந்து அவர்களும் இயேசு வின் பின்னே வர தேவன் உன்னையும் ஒரு மகளாக இவ் ஆண்டு பயன்படுத்த நீ தீர்மானம் எடுத்து செயற்படுவாயா?

**மத்தேயு 18:2-3 (2.) இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி: 3. நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய் யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**






# அனை... புத்தா... வாக்குத்த...

# கர்த்தர் நம் நடுவில்; இனித் தீங்கைக் காணாதிருப்பீர்கள்!

கடந்த 2015ஆம் ஆண்டு கர்த்தா நமக்கு: **"உன்னோடே கூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்: உன்னோடே கூட இருந்து நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும் - யாத்திராகமம் 34:10"** என்ற வார்த்தையின்படி செயற்பட்டார் என்பதை பலரது சாட்சி மூலம் அறிந்து தேவனை மகிமைப்படுத்தினோம். **நிச்சயமாகவே கர்த்தருடைய செய்கையையும், பயங்கரமான காரியங்களையும் அனேகர் கண்டார்கள்.**

**இன்று பிறந்திருக்கும் இப் புத்தாண்டில் கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் என்னவென்றால்: செப்பனியா 3:15b இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்: இனித் தீங்கை காணாதிருப்பாய்.**

இதுவரை காலமும் உங்களுடைய வாழ்க்கையில் தோல்விகளும், வேதனைகளும், நன்மையாய் தோன்றிய

க
பு
ண
எ
யி
து
எ
ப
ே
வ
த
ரா




**இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்: இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.**
**செப்பனியா 3:15[b]**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனல் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் புத்தாண்டு நல் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜீவனுள்ளோர் தொகையில் வைத்து இந்த புதிய ஆண்டை காண கிருபை செய்த தேவனுக்கு எல்லா மகிமையும், கனமும் உண்டாவதாக.

காரியங்கள் இறுதியில் தீமையாய் முடிந்ததும், இனி என்னுடைய வாழ்க் கையில் நன்மை நடப்பது என்பது எட்டாக்கனி என்றும் நினைத்து தோல்வி யினால் எழுந்திருக்க முடியாமல் துவண்டுபோய் இருக்கலாம். ஏன் என்னுடைய வாழ்க்கையில் இப்படிப் பட்ட அவமானங்கள்? என்று சோர்ந்து போயிருக்கலாம். அப்படியாக இருப்ப வர்களுக்கு இந்த ஆண்டில் உங்கள் தலைகளை நிமிரப்பண்ண இரட்சக ராகிய இயேசு ஓர் நற்செய்தியைத் தருகின்றார்: **"இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்: இனித் தீங்கைக் காணாதிருப்பாய் - செப்பனியா 3:15[b]"**

இஸ்ரவேல் தேவனுடைய ஜனம், அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட சந்ததி. இவர்களுடைய ராஜா தேவாதி தேவனாகிய கர்த்தர். இந்த ராஜாவாகிய கர்த்தர் தேவ ஜனத்தின் நடுவில் வாசம்பண்ணும் போது தேவ ஜனம் தீங்கைக் காணமாட்டார்கள்.



**சங்கீதம் 24:9-10 9. வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்: அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். 10. யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர்: அவரே மகிமையின் ராஜா. (சேலா.)** *சேனைகளின் கர்த்தரான மகிமையின் ராஜா உட்பிரவேசிக்க வேண்டுமாயின் அதற்கு இடம் உண்டாக்கப்பட வேண்டியது அவசியம். தேவ ஜனம் கர்த்தருக்கு இடம் உண்டாக்கும் போது அவர் அவர்கள் நடுவில் வாசம் பண்ணுவார். இப் புதிய ஆண்டிலே, தேவ பிள்ளைகளே உங்கள் தனிப்பட்ட வாழ்வில், குடும்ப வாழ்வில், உங்கள் வீட்டில் எங்காயிருந்தாலும் அவருக்கு, அவருடைய பிரசன்னத்திற்கு இடம் உண்டாக்குவீர்களானால் நிச்சயம் அந்த மகிமையின் ராஜா உங்கள் நடுவில் இருப்பார்.*

**11இராஜாக்கள் 4:9 அவள் தன் புருஷனை நோக்கி: இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்.** *கனம் பொருந்திய, பேர் பெற்ற ஸ்திரீ தேவனுடைய பிரசன்னத்தை சுமக்கும் தேவ மனுஷனுக்கு தன்னுடைய வீட்டில் இடம் உண்டாக்க வேண்டும் என்று நினைத்து தன் கணவனுடன் பேசி, அவள் தேவ மனுஷன் தங்குவதற்கு ஓர் இடத்தை ஏற்பாடு பண்ணுகின்றாள். இப்படி அவர்கள் நடுவில் தேவ பிரசன்னத்தை சுமந்த தேவ மனுஷன் வாசம்பண்ணும் போது: அவளுடைய குடும்பத்தை ஆசீர்வதிக்க வேண்டும் என்று:* **11இராஜாக்கள் 4:14 அவளுக்குச் செய்யவேண்டியது என்னவென்று கேயாசியை அவன் கேட்டதற்கு: அவன், அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான்.** *பார்த்து அவளுடைய குறைவாகிய பிள்ளையில்லாத தன்மையை நீக்கிவிடுகின்றார்.*

## தேவனுடைய பிரசன்னத்தை சுமந்த தேவ மனுஷனுக்கு அவள் இடம் கொடுத்த போது அவளுடைய வாழ்க்கை மாற்றப்பட்டது.

*தேவனுடைய பிரசன்னத்தை சுமந்த தேவ மனுஷனுக்கு அவள் இடம் கொடுத்த போது அவளுடைய வாழ்க்கை மாற்றப்பட்டது.*

**“இவ் 2016ஆம் ஆண்டில் நம்முடைய வாழ்க்கையிலும் ராஜாவாகிய கர்த்தருக்கும் அவருடைய பிரசன்னத்திற்கும் இடம் அமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக அவர் நம் நடுவில் இருப்பார். அவர் நம் நடுவில் இருப்பாராகில்: நாம் எந்தத் தீங்கையும் காணமாட்டோம்.”**

*எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்த, இஸ்ரவேல் ஜனங்களின் கூக்குரல் தேவ சமூகத்தில் எட்டிய போது அவர்களை விடுவிக்க ஆண்டவர் தன் தாசனாகிய*




மோசேயை அனுப்புகின்றார். அவன் சென்று பார்வோனைச் சந்தித்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்பதற்காக ஆண்டவருடைய நாமத்தினால் எத்தனையோ அடையாளங்களை நடப்பித்தும் பார்வோன் அவர்களை விடவில்லை. இறுதியில் எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகள் சங்கரிக்கப்பட்ட போது பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை போகவிடுகின்றான். அவ்வாறு இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு செங் கடல் வரைக்கும் வந்தார்கள். அங்கே அவர்களுக்கு தடையாக செங்கடல் முன்நின்றது. **யாத்திராகமம் 14:10 பார்வோன் சமீபித்து வருகிற போது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்: அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.** அவர்களை விடுவித்த பார்வோன் மீண்டும் தன் சேனைகளோடு அவர்களை அடிமைப்படுத்தும்படி துரத்தி வருகின்றான்.

ஆனால் அற்புதவிதமாய் ஆண்டவர்: **யாத்திராகமம் 14:16 நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு: அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.** வழியைத் திறந்து செங்கடலை ஜனங்கள் கடக்கும்படி செய்தார். **யாத்திராகமம் 14:19 அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப்பின்னாக நடந்தார்: அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது.** தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு இருந்தார். இதன் நிமித்தமாக தீங்கு அவர்களைத் தொடுவதற்கு ஆண்டவர் அனுமதிக்கவேயில்லை. **யாத்திராகமம் 14:20 அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது: எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது: இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.** எகிப்தியர்களுக்கோ தேவன், தேவ பிரசன்னம் அந்தகாரமும் பயங்கரமுமாய் மாறியது. ஆனால் தேவ ஜனங்களுக்கோ தேவன் நடுவில் இருப்பது வெளிச்சமாய் இருந்தது.

## தேவனாகிய கர்த்தர் நடுவில் இருப்பாராகில் தீங்கு நம்மை சேதப்படுத்த முடியாது.

**தேவபிள்ளைகளே உங்களை எகிப்தியர்கள் துரத்திவர முடியும். நீங்கள் எங்கும் செல்ல முடியாதபடி பாதைகள் மூடப்பட்டு சிக்கித்தவிக்கின்றவர்கள் போன்று காணப்படலாம். ஆனால் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவனாகிய கர்த்தர் நடுவில் இருப்பாராகில் தீங்கு நம்மை சேதப்படுத்த முடியாது.**

இன்று கண்ட எகிப்தியரை இனி காணமாட்டீர்கள் என்று தன்னுடைய ஜனங்களுக்கு கூறிய ஆண்டவர் எகிப்தியரை செங்கடலில் மடியப்பண்ணினார்.



தன் மாமன் வீட்டை விட்டு யாக்கோபும் அவனது இரண்டு மனைவியரும், அவனது பிள்ளைகளும் வந்துவிட்டார்கள். இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டு தன் மாமனாருக்கு வேலை செய்தவன் தன் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும் என்று புறப்பட்டான். ஆனால் இவ்வாறு யாக்கோபும் அவனுடைய குடும்பமும் புறப்பட்டதைக் கேள்விப்பட்ட மாமனாராகிய லாபான் அவர்களைப் பின்தொடர்ந்து அவர்களுக்குத் தீங்கு செய்ய நினைத்து வருகின்றான். ஆனால் அன்று இராத்திரியே கர்த்தர்: **ஆதியாகமம் 31:24 அன்று ராத்திரியிலே தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார்.** தேவன் யாக்கோபுடன் இருந்தபடியால் அவன் மீது கரிசனையுள்ளவராய் அவனுக்குத் தீங்கு நேரிடாதபடி, தீங்கு செய்ய நினைத்தவனை எச்சரித்தார். **ஆதியாகமம் 31:29 உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய எனக்கு வல்லமை உண்டு: ஆகிலும், உங்கள் தகப்பனுடைய தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார்.**

**தேவன் உங்கள் நடுவில் இருப்பாராகில் நீங்கள் பயப்படவேண்டாம். தீங்கு உங்களை அணுகுவதில்லை.**

**சொந்த ஜனங்கள், உறவினர்கள் இப்படி வேறு யாராவது தீங்கு செய்ய வருவார்கள் என நினைத்து நீங்கள் பயந்து கொண்டிருக்காலம். ஆனாலும் தேவன் உங்கள் நடுவில் இருப்பாராகில் நீங்கள் பயப்படவேண்டாம். தீங்கு உங்களை அணுகுவதில்லை. எவ்விதம் லாபானை தேவன் எச்சரித்தாரோ அதே போன்று உங்களை எதிர்ப்பவர்களையும் எச்சரித்து அவர்கள் உங்களுடன் சாமாதானமாக சேரப்பண்ண ஆண்டவரால் முடியும்.**

அதே போன்று இதன் பின் யாக்கோபை எதிர்த்து அவனது சொந்த சகோதரனாகிய ஏசா வருகின்றான். **ஆதியாகமம் 32:6-8 (6.) அந்த ஆட்கள் யாக்கோபினிடத்துக்குத் திரும்பிவந்து: நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போய்வந்தோம்: அவரும் நானூறுபேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்றார்கள். 7. அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து: 8. ஏசா ஒரு பகுதியின்மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு என்றான்.** ஆனாலும் இவற்றுக்கு மத்தியிலும் யாக்கோபுடன் கர்த்தர் இருந்தபடியால் அதை நன்மையாக முடியப்பண்ணினார். யாக்கோபு தன்னை ஏமாற்றி தன்னுடைய ஆசீர்வாதங்களையெல்லாம் பெற்ற நாளில் இருந்து அவனை அழிக்க வேண்டும், விடக்கூடாது என்ற மனநிலை



ஏசாவுக்கு இருந்தது. ஆனால் அப்படியெல்லாம் இருந்தும்: **ஆதியாகமம் 33:4 அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்: இருவரும் அழுதார்கள்.** இவ்வாறு செயற்படும்படியாக ஆண்டவர் ஏசாவை மாற்றினார்.

ஆகவே பிரியமானவர்களே, இன்று பிறந்திருக்கும் இப் புத்தாண்டில் ராஜாவாகிய கர்த்தர் உங்கள் நடுவில் வருவதற்கு இடம் அமைத்து கொடுத்து: அவர் உங்கள் நடுவில் இருப்பாராகில், இவ் வருடம் முழுவதும் நிச்சயம் தீங்கைக் காணமாட்டீர்கள். சகலத்தையும் தேவன் நன்மையாக முடியப்பண்ணுவார். அந்த வல்லமையுள்ள ராஜாவின் வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது! ஆயத்தமாவோம்!! ஆயத்தப்படுத்துவோம்!!!.

**"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**


**போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,**
தலைமைப் போதகர்,
சீயோன் தேவாலயம்,
யாழ்ப்பாணம்.


# இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்: இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

செப்பனியா 3:15b

**சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்:**


**வினாவிடை – 71**
**வி. சர்மிளா,**
**ஊர்காவற்றுறை.**

**ம.தேவகிறேசியன்,**
**பாண்டவெட்டை.**
**குறுக்கெழுத்துப்போட்டி – 70**

**சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்:**



அன்பின் வாசகர்களே! குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடை போட்டிகளில் பங்குபெறுபவர்கள் இனிவரும் நாட்களில் இரண்டின் விடைகளையும் தனித்தனித் தாள்களில் எழுதி அனுப்புவதுடன், உங்கள் பெயர், முகவரி என்பவற்றையும் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.



# எனக்காக...






J. கிறேசியன்

அன்பிற்குரிய அனலின் வாசக நெஞ்சங்களே மறுபடியும் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட புதிய ஆண்டிலே நற்செய்திப் பகுதிக்கூடாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் காலத்திற்கு காலம் தம்முடைய மிகுந்த கிருபையினால் எம்மை நடத்துவது எவ்வளவு மேலானது. தம்மை நம்புகின்றவர்களிற்கு அவர் ஆயத்தம்பண்ணி வைத்துள்ள நன்மைகள், ஆசீர்வாதங்கள எத்தனை பெரிதாகவுள்ளது. அதனால் தான் சங்கீதக்காரனாகிய தாவீது தன் வாழ்வில் ஒரு பெரிய விசுவாச அறிக்கை செய்வதைக் காணலாம். அது தான்: **சங்கீதம் 138:8 கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்:**

இது ஒரு ஆழமான, உறுதியான அறிக்கை. ஏனெனில் என்னை சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தா: இந்த பெலிஸ்தியனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்று அறிக்கை பண்ணிய தாவீது, இஸ்ரவேலுடைய ராணுவங்களின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தினாலேயே பெலிஸ்தியனை மடங்கடிக்கச் சென்றான். தேவனும் அவ் அறிக்கையை மெய்ப்பிக்கச் செய்தார். தாவீதின் வாலிப மனதில் வேரூன்றிவிட்ட இந்த விசுவாசம் அவரது வாழ்க்கை முழு

**“ ” தாவீதின் வாலிப மனதில் வேரூன்றிவிட்ட இந்த விசுவாசம் அவரது வாழ்க்கை முழுவதிலும் வந்து போன துன்பங்கள், சோதனைகள், சோகங்கள் மத்தியிலும் மங்கிப் போகவில்லை.**




வதிலும் வந்து போன துன்பங்கள், சோதனைகள், சோகங்கள் மத்தியிலும் மங்கிப் போகவில்லை. முற்றிலும் கர்த்தரையே சார்ந்திருந்த தாவீது கூறுகின்றார்: **"கர்த்தர் எனக்காக யாவையும்செய்து முடிப்பார்"** என்பதாக.

இதனை வாசிக்கும் அன்பு நெஞ்சமே, தாவீதைப் போன்று நமது கண்களின் பார்வையும் அலைமோதும் சூழ்நிலைகளும், நம்பி இருந்தவர்களால் ஏற்பட்ட ஏமாற்றங்கள், இழப்புக்கள், தோல்விகள், சோகங்கள், சோதனைகளும், நமது எதிர்காலத்தை இருளடையச் செய்துவிடலாம். தேவபிள்ளையே உனக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் விசுவாசத்தை தட்டி எழுப்ப வேண்டிய தகுந்த தருணம் இதுவே. உனக்கு முன்னிருக்கும் பிரச்சினைகளை பார்த்து தயங்காமல் உன்னுடைய விசுவாசத்தை பயிற்றுவிக்கும் தருணமாக எண்ணிக் கொண்டு ஸ்தோத்திரத்துடன் முன்னேறிச் செல். இரும்புக் கதவுகளால் அடைபட்ட அனுபவத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றாயா? அத் தடைகளை உடைத்து, உன் பெலனை அதிகரிக்கச்செய்ய சிறந்த வேளை என்றெண்ணி, துணிவுடன் எழுந்து நில். தாவீதைப் போல தப்புவிப்பார், தப்புவிப்பார் எனக்கூறு, யாவையும் செய்து முடிப்பார் என்று விசுவாசி.

சகோதரனே! சகோதரியே விசுவாசம் என்பது: **உதட்டளவில் அல்ல, உள்ளத்திலிருந்து புறப்பட்டு செய்கையிலே வெளிப்பட வேண்டும்.** பாடுகள் மத்தியில் கர்த்தரே எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று தைரியமாக அறிக்கை பண்ணுவோம் தேவனே ஆசீர்வதிப்பார்!.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**



# குறுக்கெழுத்துப் போட்டி - 70

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. கீரியாத் செப்பேர் - நியா 1:11
05. சகாயம் - சங்கீதம் 124:8
07. எர்மேரனை - உபாகமம் 3:9
11. ஏலியிடம் - 1சாமு 2:31

**வலமிருந்து இடமாக**

02. இஸ்போசேத் - 11சாமு 4:7
03. ஆமான் - எஸ்தர் 3:5
06. மோவாபின் - நியா 11:18
09. காதியேல் - எண் 13:10
12. அன்னவஸ்திரம் - உபா 10:18

**மேலிருந்து கீழாக**

01. கீசோன்நதியில் - நியா 5:21
04. யோசதாக் - 1நாளா 6:14-15

**கீழிருந்து மேலாக**

08. எலியேசர் - யாத் 18:4(குழம்பி)
10. சாலொமோன் - 1இரா 10:27
12. அத்தாலியாள் - 11இரா 8:26






# பக்தர்களின் பயிலகம்

## ★ புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ★

## உள்ளூர் சபையின் ஜெப ஜீவியம்

ஆதிச் சபை ஜெப சூழலில் பிறந்தது. இவர்கள் ஒன்றாகக் கூடுவதற்கான பிரதான நோக்கம் ஜெபிக்க, துதிக்க, ஆதிராக்கவாகும். இதுவே தேவனோடு கொண்டுள்ள அவர்களது வாழ்வின் உண்மையான வெளிப்பாடு ஆகும்.

நாம் ஜீவிக்க மூச்சுவிட வேண்டும். இதே போல் தான் எம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஜெபமும் ஆகும். ஜெபம் எம் இருதயம் தேவனோடு தொடர்பு கொள்வதும், தேவன் நம் இருதயத்தோடும் தொடர்பு கொள்வதும் ஆகும். ஜெபமானது இருதயத்தின் சிறகுகள். மனிதர்களாகிய எமக்கு தேவன் கொடுத்த பெரும் சிலாக்கியம் இதுவாகும். ஆதி அப்போஸ்தலரும் அவர்களுடன் இருந்தோரும் நல்ல ஜெப ஜீவியத்தை வளர்த்தெடுத்தார்கள். பெந்தெகொஸ்தே தினத்திற்கு முன் நடந்த ஜெபக்கூட்டம் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக் கூடிய நல் உதாரணம் ஆகும். அப்போஸ்தலர் 1:12-14. இதில் இருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடியதை ஆராய்வோம்.

### 01. எல்லா சீஷர்களும் மறுபடி பிறந்தவர்கள்

இவர்கள் தேவனோடும் மற்றவர்களோடும் சரியான உறவில் இருந்தார்கள். பேதுரு, கிறிஸ்துவை மறுதலித்த பாவத்தை அறிக்கை செய்து, அவனது பாவ மன்னிப்பில் களிகூர்ந்து கொண்டிருக்கிறான். சந்தேகித்த தோமா உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை முழு இருதயத்தோடும் விசுவாசித்தான். யோவானும் யாக்கோபும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் முதன்மை ஸ்தானத்தைக் கேட்டு சண்டைபிடிப்பதில்லை. இவர்கள் எல்லோரும் தாழ்மையுள்ளவர்களாக இருந்தார்கள்.



Happy New Year

## 02. இவர்கள் எல்லோரும் பூரண ஐக்கியத்தில் கூடியிருந்தார்கள்

மத்தேயு 18:17-20

## 03. பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய வாக்குத்தத்திற்கு கீழ்ப்படிந்து கூடினார்கள்.

இயேசு இவர்களுக்கு அருமையான வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார் - அப்போஸ்தலர் 1:4,5,8. **பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு ஒரு தகமை தேவனுக்குக் கீழ்ப்படிவது.** அப்போஸ்தலர்கள் தங்களை உபத்திரப்படுத்தியவர்களுக்கு இதைக் குறித்து சாட்சி கொடுத்தார் - அப்போஸ்தலர் 5:32.

## 04. இவர்கள் தேவ சித்தத்தின்படி ஜெபித்தார்கள்.

இவர்களது ஜெபத்திற்கு ஒரு குறிக்கோள் இருந்தது. **அது தான் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது.** எல்லோரும் ஒரு காரியத்தைக் குறித்தே ஜெபித்தார்கள். **தேவ சித்தத்தின்படி ஜெபிப்பதற்கு ஓர் அருமையான வாக்குத்தத்தம் உண்டு – 1யோவான் 5:14–15.**

**இந்த ஜெபத்தின் பலாபலனை நாம் மறக்கமுடியாது. பெரும் வல்லமை பெற்றார்கள்.** ஜெப வாழ்வு பரிசுத்த ஆவியானவரினால் ஏவப்பட்டதாகவும், வழிகாட்டப்பட்டதாகவும் இருந்தது. **நாம் "ஆவியிலே" ஜெபம் பண்ணுவோம் என வேதம் கூறுகின்றது.** எபேசியர் 6:18, யூதா 20.

**எம் ஜெப வாழ்க்கைக்கும் உதவி செய்யும்படி தேவன் பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுத்துள்ளார். ரோமர் 8:26–27.** ஆதி சபையாரின் ஜெபம் அற்புதம் தான். **இதற்குக் கொடுக்கத்தக்க ஒரே விளக்கம்: இவர்களது ஜெபம் பரிசுத்த ஆவியானவரினால் வழிநடத்தப்பட்டது.** இது எப்பொழுதும் அற்புதத்திற்கே வழிநடத்தும். **ஆதி சபையில் ஜெபத்திற்கு ஆதிக்கம் செலுத்தும் இடம் கொடுக்கப்பட்டிருந்தது – அப்போஸ்தலர் 2:42, அப்போஸ்தலர் 4:31.** எல்லா அப்போஸ்தலர்களும் ஜெபத்தில் வல்லவர்கள்: **அவர்கள் ஜெபத்தை அலட்சியம் செய்யவில்லை.**

இவர்கள் எவ்விதமாய் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள் என்பதைப் பாருங்கள்: அப்போஸ்தலர் 6:4. **வேதாக முறை ஜெபம் இல்லை, வேதாகம முறை வாழ்க்கை வாழ முடியாது.** இப்படிப்பட்ட தலைவர்களை உடைய சபைகள் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும். **இப்படிப்பட்ட சபைகளில் ஆவிக்குரிய வெற்றி நிச்சயம்.**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

தொடரும்...



# குறுக்கெழுத்துப்போட்டி — 71

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ⊕ | 01 | ⊕ | | | | | | 02 |
| | | 03 | | | | ⊕ | ⊕ | |
| | | | ⊕ | | | 04 | | |
| | | | ⊕ | ⊕ | ⊕ | ⊕ | | |
| | | | ⊕ | ⊕ | | | 05 | |
| | | | | 06 | | | ⊕ | ⊕ |
| | | | | ⊕ | | | 07 | |
| | ⊕ | ⊕ | | 08 | | | | |
| 9 | | | 10 | | | | ⊕ | 11 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களை தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- நன்றி -



**இடமிருந்து வலமாக**

03. "இருப்புக்காளவால்" என்று கூறப்பட்டுள்ள தேசம்
06. நேகோவோடே யுத்தம் பண்ண வேஷம் மாறிச் சென்றவன்
08. இவன் 300 பேர்களின் மேல் தன் ஈட்டியை ஓங்கி அவர்களை ஒருமிக்க கொன்று போட்டான்
09. தண்ணீர்கள் உடைத்தோடுகிறது போல, கர்த்தர் என் சத்துருக்களை எனக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார் என்று இந்த ஸ்தலத்துக்கு இவ்வாறு பெயரிடப்பட்டது

**வலமிருந்து இடமாக**

02. ராஜாவின் அரமனைக்குள் குதிரைகள் பிரவேசிக்கிற வழியிலே இவளை கொன்று போட்டார்கள்
04. ஓசேயாவுக்கு இவ்வாறு பெயரிடப்பட்டது
05. கர்த்தர் சாலொமோனுக்கு விரோதமாக எழும்பப்பண்ணின முதல் விரோதி
07. சூசான் அரமனை இந்த தேசத்திலுள்ளது

**மேலிருந்து கீழாக**

01. அக்சாளை இவளுக்கு விவாகம் பண்ணிக் கொடுக்கப்பட்டது
02. ஈசாயின் குமாரரில் சவுலோடே யுத்தத்திற்கு போனவர்களில் ஒருவன்
03. எரேமியாவை துரவிலே போட்ட போது அவனுக்காக ராஜாவிடம் மன்றாடி விடுவித்தவன்

**கீழிருந்து மேலாக**

05. இவன் முன்னால் தாவீது தன்னைப் பித்தங் கொண்டவனைப் போல காண்பித்தான்
09. தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும்...........
10. "கண் திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது" என்று தன்னைக் குறித்துக் கூறியவன்
11. தான் இருக்கிற ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி அதிலே செத்தவன்






## வேதப்பகுதி: யோசுவா 1:1—9

**யோசுவா** என்பவரிடம் தேவன் வந்தார். யோசுவாவே **"நீ போகும் இடமெல்லாம் நான் உன்னோடு வருவேன்"** என்றார். நாம் போகுமிடமெல்லாம் தேவன் நம்மோடு வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஒரு புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கின்றோம். இந்த ஆண்டு எப்படியிருக்குமோ நமக்குத் தெரியாது. ஆனால் நம்மோடு தேவன் இருந்தால் நாம் எதைக் குறித்தும் பயப்படத் தேவையில்லை.




ஆனால் எப்போது **"தேவன் நம்மோடிருப்பார்?"** யோசுவா தேவன் சொன்னபடி செய்வதற்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். எனவே தேவன் யோசுவா எங்கு போனாலும், என்ன செய்தாலும் கூட வருவதாகச் சொன்னார். நாமும் தேவனுக்காக வாழ வேண்டும். தேவன் சொன்னபடி வாழ விரும்ப வேண்டும். அப்போது தேவன் நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து நடத்துவார்.

**சிந்தனைக்கு:— தேவனுக்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டால், தேவன் நமக்காக எல்லாவற்றையும் செய்வார்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — ஜனவரி 01



## ஜான் ஜி பேட்டன்
## 1824 - 1907

### சோதனையிலும் சாதிப்போம்

மனிதர்களை கடித்து, ருசித்து, சாப்பிடும் நரமாமிசப் பட்சினிகளைக் குறித்து எப்பொழுதாவது கேள்விப்பட்டதுண்டா? கேள்விப்பட்டிருப்பீர்கள்.

ஆஸ்திரேலியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள நியூஹெப்ரிட்ஸ் தீவு கூட்டங்கள். நரமாமிச பட்சிகளாய் வாழ்ந்தவர்கள். நாகரீகம் என்ன என்பதையே அறியாதவர்கள்.

1858ஆம் ஆண்டு தனது இளம் மனைவி மேரி ஆனுடன் நியூஹெப்ரிட்ஸ் தீவுகளை நோக்கி பயணம் சென்றார். நரமாமிசப் பட்சிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்தாலும் எதையும் பொருட்படுத்தாது தன் ஊழியத்தைத் தொடர்ந்தார்.

1859ஆம் வருடம் தன் அன்பு மனைவியை விஷக்காய்ச்சலினால் இழந்தார். மூன்று வாரமான பிஞ்சு குழந்தையும் ஒரே வாரத்தில் இறந்து போனது. தன் கையாலேயே மனைவி மற்றும் குழந்தையை குழி தோண்டிப் புதைக்கும் கொடூரத்திற்கு உள்ளானார்.

சோதனைகளும், வேதனைகளும் ஒன்று சேர்ந்து பேட்டனை நிலைகுலையச் செய்தது. என்ன வந்தாலும் துணிந்து நிற்பதும் அழைப்பில் நிலைத்து நிற்பதுமே மிஷனெரிப் பணியின் தத்துவம் என்பதால் பேட்டன் எதைக் கண்டும் சோர்ந்து போய்விடவில்லை.




ஒரு முறை அத் தீவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. பேட்டன் கிணறு வெட்டி உதவினார். பூமியிலிருந்து தண்ணீர் வருவதைக் கண்ட மக்கள் பூமியின் அடியிலிருந்து மழை பெய்கிறது என்றனர். அறியாமையில் வாழ்ந்த அத் தீவு மக்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார் பேட்டன். 1899ஆம் ஆண்டு அனிவா மொழியில் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்து வெளியிட்டார்.

ஆதரவற்றோர் இல்லங்கள், பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள், வேதாகப் பயிற்சி மையம் ஆகியவற்றை அம் மக்களுக்காய் ஏற்படுத்திய பேட்டன், 1909ஆம் வருடம் இதே நாள் ஜனவரி 28ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

**அன்பரே! ஜான் ஜி பேட்டனைப் போன்று உங்களால் செயற்படமுடியுமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இயேசு கிறிஸ்துவும் அவருடைய ஐக்கியமும் எனக்கு கிடைத்திராவிடில் நான் எப்பொழுதோ பைத்தியக்காரனாகியிருப்பேன் — ஜான் ஜி.பேட்டன்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 28**



## ஜான் ரோஜர்ஸ்
## 1500 - 1555

### மாபெரும் சிலாக்கியம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக நிலைத்து நின்று இரத்த சாட்சியாக மரிப்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய சிலாக்கியம் அல்ல. இச் சிலாக்கியம் பெற்றோர் பேறுபெற்றவர்கள் ஆவர்.

1555ஆம் வருடம், பிப்ரவரி 04ஆம் தேதி. மாபெரும் கூட்டத்தின் நடுவே கம்பத்தில் கைகால்கள் கட்டப்பட்டவராக சுற்றிலும் விறகு கட்டைகள் அடுக்கப்பட்டுத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டார் ஜான் ரோஜர்ஸ்.

"இரத்த மேரி" என்று அழைக்கப்படும் இங்கிலாந்து அரசியின் ஆட்சிக்காலம் அது. கத்தோலிக்க மதம் சாராத புரோட்டஸ்டண்டுகள் தேடிப் பிடிக்கப்பட்டு இரத்த சாட்சிகளாக்கப்பட்டார்கள். ஆயினும், புரட்சியாளர்கள் தங்கள் புதுமைகளை கிறிஸ்துவுக்குள் மிகுந்த தைரியத்துடன் செய்து வந்தனர்.

ஜான் ரோஜர்ஸ் 1500ஆம் வருடம் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்றவர். கத்தோலிக்கப் போதகராகத் தன் பணியைத் தொடங்கிய இவர், ஜான் விக்ளிப்பின் நட்பைப் பெற்று கிறிஸ்துவின் தொண்டரானார். அனைவர் கைகளிலும் வேதாகமம் கிடைக்க வேண்டும் என்ற ஆவல் அவர் உள்ளத்தில் எழுந்தது. இந் நிலையில் ஜான் விக்ளிப் கலகக்காரர் என்று கைது செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டார். எனவே, விக்ளிப் மொழிபெயர்த்த வேதாகமத்தின் பிரதிகளை ஆங்கிலத்தில் வெளியிட முயற்சிகளை மேற்கொண்டார். மக்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் மொழிகளில் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தனர்.

இறுதியாக, ஜான் ரோஜர்ஸ் எதிரிகளின் கைகளில் சிக்கினார். வேதாகமத்தை வெளியிட்ட காரணத்திற்காக அவரைத் தீயிலிட்டு உயிரோடு கொழுத்தினர். மரண வேளையிலும், கிறிஸ்துவின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவராக தன் விசுவாசத்தை நிலைபெறச் செய்தார்.

**அன்பரே! உங்கள் கரங்களில் உள்ள வேதாகமத்தை எவ்விதம் பயன்படுத்துகிறீர்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: என்னை எல்லா கட்டுக்களிலிருந்தும் விடுவித்து, கல்வாரியின் ஆணிகள் என்னில் பாய, என்னை திறக்க உதவி செய்யும் — ஜிம் எலியட்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 04**

# சரியான விடை எழுதியவர்கள்

குறுக்கெழுத்துப் போட்டி - 71, வினா விடை - 72

**பாண்டவெட்டை**

01. ம.நிம்சிகா
02. ம.சிவகௌரி
03. ம.தேவசாந்தன்
04. ம.தேவகிறேசியன்
05. த.மதியழகன்
06. செ.நகுலா
07. எஸ்.எமீமாள்
08. எஸ்.டிசேந்தன்
09. வ.யோகனன்
10. வ.ஜெயாழினி
11. வ.கெத்சியாள்
12. வ.தயாழினி
13. ம.நிதர்சினி
14. சி.ஜெறோம்
15. சி.ஜெயந்தினி
16. சி.றஜிந்தினி
17. செ.கயா
18. சூ.உசா
19. ம.மதுசா
20. சி.ரதீஸ்வரி

**காரைநகர்**

01. நா.கிறிஸ்தீனா
02. நா.சிவபாக்கியம்
03. தே.காந்தரூபன்
04. நா.கிறிஸ்ரீன்
05. செ.பிறேமிளா
06. அ.கம்சிகா
07. அ.எஸ்தர்
08. அ.துர்க்கா
09. கோ.இன்பவதனி
10. அ.வெரோனிக்கா
11. அ.கிறிஸ்ரீனா

**ஊர்காவற்றுறை**

01. வி.சர்மிளா
02. வி.நிதர்சனா

**நவக்கிரி**

01. லனுசியா
02. த.பிரியங்கா
03. செ.ரூத்
04. அ.தயாழினி

**வினாவிடை - 72 மட்டும்**

01. க.விக்னேஸ்வரன் - ஊர்காவற்றுறை
02. சூ.ஜான்சி - நாவற்குழி

**குறுக்கெழுத்துப்போட்டி 71 மட்டும்**

**01. குகன் குடும்பம் - கனடா**

நாவாந்துறை

01. டெ.யோண் டானியல்
02. ச.டிலக்சன்
03. ம.யூட்சன்



# வினாவிடை – 72

## சரியான பதில்கள்

01. ஆத்தும நேசர் – சங்கீதம் 45:2
02. அபிகாயில் – 1சாமுவேல் 25:3
03. இயேசு – லூக்கா 3:21
04. அப்போஸ்தலனாகிய யோவான் – வெளிப்படுத்தல் தலைப்பு
05. அன்னாள் – 1சாமுவேல் 1:10–16
06. அபிஷாக் – 1இராஜாக்கள் 1:3–4
07. ஆயக்காரன் – லூக்கா 18:10–14
08. ஈசாக்கு – ஆதியாகமம் 25:21
09. இயேசு – எபிரெயர் 5:7
10. பெல்ஷாத்சார் – தானியேல் 5:1–6

# வினா விடை – 73

01. தன் மனைவியைப் பார்த்து “ஏன் அழுகிறாய்” என்று கேட்ட புருசன் யார்?
02. சோம்பலின் அப்பம் புசியாதவள் யார்?
03. தூதர்களின் அப்பமாகிய மன்னாவை புசித்தவர்கள் யார்?
04. அப்பமும் பயற்றங்கூழும் சாப்பிட்டவன் யார்?
05. எலியாவுக்கு முன் முகங்குப்புற விழுந்து வணங்கின மனிதன் யார்?
06. முதலாவது ஒரு திராட்சத் தோட்டத்தை நாட்டினவன் யார்?
07. மீனையும் தேனையும் புசித்தது யார்?
08. சேனைகளின் கர்த்தருடைய திராட்சத் தோட்டம் எது?
09. தன் புருசனண்டை அடக்கம் பண்ணப்பட்ட ஸ்திரீ யார்?
10. “திருப்பிப் போடாத அப்பம்” அது யார்?



# தேவன் தந்த வைரங்கள்

- வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை என்பதைக் காண்பிக்கும் சில கிறிஸ்தவர்கள் பெருமையையும், கௌரவத்தையும் விட்டு விடுவதேயில்லை.
- கிறிஸ்தவன் கிறிஸ்து இல்லாமல் வாழ்வது எழுப்புதலுக்கான தடைகளில் ஒன்று.
- பாடுகளின் கட்டளைகளை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றியவர்கள் ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தங்களை அடைந்திருக்கிறார்கள்.
- தாழ்மையுடன் புரியும் ஊழியப்பணி மூடப்பட்டுள்ள இருதயங்கள் திறக்கப்பட வழிசெய்யும்.
- உண்மைக் கிறிஸ்தவம் மன்னிப்பில் ஆரம்பமாகி மகிமைக்குள் கடந்து செல்கின்றது.
- பரிசுத்தமும் அர்ப்பணமும் தேவன் எதிர்பார்க்கும் அம்சங்கள். இவைகளை உடையவர்கள் கர்த்தர் பயன்படுத்தும் சிறந்த பாத்திரங்களாக முடியும்.
- தேவன் விட்டுவிடும்படி எதிர்பார்ப்பதை விட்டுவிடாதவர்கள் தேவன் விட்டுவிடும்படி எதிர்பார்க்காதவைகளை விட்டுவிடுகின்றனர். இதுவும் மாய்மாலத் தோற்றம் தான்.



Happy New Year

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

### சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 220.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

### சந்தா கூப்பன்

பெயர்:-.......................................................................

விலாசம்:-.......................................................................

.......................................................................

.......................................................................

.......................................................................

**தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.**


இனிய புதுவருட நல் வாழ்த்துக்கள்!
Wish You a Happy New Year!
To:
Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.